# <u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, <u>SALEM.</u>

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.193 /2018
Deposition of Witness for Prosecution PW- 1
Name :திரு.கோகுலவாசன்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 16th day of September- 2021.

<u>முதல் விசாரணை:-</u>

நான் தற்போது வாழப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . இவ்வழக்கு சம்பவ காலத்தில் முத்தம்பட்டி குருப் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். முத்தம்பட்டி குரூப்பில் இரண்டு கிராமங்கள். முத்தம்பட்டி மற்றும் மன்னாக்கம்பட்டி. சாட்சி மாரிமுத்து மன்னாயக்கம்பட்டி கிராம உதவியாளராக என் கீழ் பணிபுரிந்தார். 25-6-2017 அன்று காலை 6 மணிக்கு கிராம உதவியாளர் எனக்கு போன் செய்து மன்னாயக்கம்பட்டி கிராமத்தில் முருகேசன் என்பவர் அவரது வீட்டில் சந்தேகத்திற்கிடமான வகையில் கழுத்தில் காயங்களுடன் இறந்து கிடப்பதாக தகவல் சொன்னார். நான் உடனடியாக கிளம்பி சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு போய் பார்த்த போது முருகேசன் அவரது வீட்டில் மேலே கூறியவாறு காயங்களுடன் இறந்து கிடந்தார். அந்த சமயத்தில் முருகேசன் வீட்டில் வேறு யாரும் கிடையாது. அக்கம் பக்கத்தில் விசாரித்த போது கணவன் மனைவிக்குமிடையில் அடிக்கடி சண்டை வரும் என்று கேள்விப்பட்டேன். இறந்த முருகேசனின் மனைவி பெயர் தனலட்சுமி என்று தெரிந்து கொண்டேன். முருகேசனின் உறவினர்கள் யாரும் புகார் கொடுக்க முன் வராததால் வாழப்பாடி காவல் நிலையம் சென்று நான் எழுத்து மூல புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்தான் மேலே கூறியவாறு நான் கொடுத்ததாகும். அது அ.சா.ஆ 1. அந்த புகாருக்கு பின்னர் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டார். பின்னர் அதே தினம் மதியம் 1-00 மணியளவில்

ஆய்வாளரிடமிருந்து தகவல் கிடைத்ததின் பேரில் சின்னம்மநாயக்கன்பாளையத்திற்கு சென்றபோது அங்கு ஆய்வாளர் பஸ் நிறுத்தத்தில் வைத்து முருகேசன் மனைவி தனலட்சுமியை கைது செய்தார். ஆஜர் எதிரிதான் மேலே கூறியவாறு ஆய்வாளர் கைது செய்த எதிரி ஆவார். பின்னர் எதிரியிடம் ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்கு்முலம் வாங்கினார். அப்போது நானும் உடனிருந்தேன். அந்த ஒப்புதல் வாக்கு்முலத்தில் நானும் எனது கிராம உதவியாளர் மாரிமுத்துவும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். சாட்சியின் அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 2. எதிரி தனது ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட துப்பட்டா மற்றும் சேலை ஆகியவற்றை மறைத்து வைத்திருப்பதாகவும் அவற்றை தன்னை அழைத்து சென்றால் எடுத்து ஆஜர்படுத்துவதாகவும் கூறினார். அதன்பேரில் சம்பவம் நடந்த இடத்திற்கு அன்று மாலை 4 மணியளவில் எதிரியுடன் ஆய்வாளர் சகிதம் சென்றபோது ஒரு மா மரத்திற்கு கீழே இருந்து ஒரு துப்பட்டா மற்றும் ஒரு சேலை ஆகியவற்றை எடுத்து ஆஜர்படுத்தினார். அதனை ஆய்வாளர் ஒரு மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரிலும் மேற்படி நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். அந்த மகஜர் தான் என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.,ஆ 3. மேற்கூறிய துப்பட்டா மற்றும் சேலையை பார்த்தா் அடையாளம் சொல்வேன். என்னிடம் காட்டப்படும் துப்பட்டா தான் மேலே கூறியவாறு ஆய்வாளர் கைப்பற்றியதாகும். அது சா.பொ.1. சேலை சா.பொ. 2. எதிரியின் ஒப்புதல் வாக்கு்முலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 4. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை( எதிரி தரப்பில்)

சாட்சி மாரிமுத்துவிடம் நான் வாக்குமூலம் எதுவும் வாங்கவில்லை. அவ்வாறு வாக்கு்முலம் வாங்கவேண்டும் என்றும் அவைகளில் ஒன்றினை நீதிமன்றத்திற்கும் மற்றொன்றினை காவல் நிலையத்திற்கும் மற்றொன்றை எனது உயரதிகாரிக்கும் அனுப்பவேண்டும் என்று விதிமுறைகள் இருப்பதாக சொன்னால் சரியல்ல. எனது உதவியாளரிடமிருந்து காலை 6 மணிக்கு தகவல் கிடைத்தது. அந்த சமயத்தில் நான் கிராமத்தில் உள்ள எனது வீட்டில் இருந்தேன். அது எனது கிராம நிர்வாக எல்லைக்குட்பட்ட முத்தம்பட்டி கிராமம். முத்தம்பட்டி கிராமத்திலிருந்து சம்பவ இடம் இரண்டு கிமீ துாரம். சம்பவ இடத்திற்கு நான் சென்ற போது காலை 6-15 மணியிருக்கும். நான் வாழப்பாடி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். எனது புகாரினை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேன். காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்த போது காலை சுமார் 7-15 மணியிருக்கும். அந்த உதவி ஆய்வாளரின் பெயர்

தெரியாது. காவல் ஆய்வாளருடன் சம்பவ இடத்திற்கு வந்தீர்களா என்றால் ஆமாம். சம்பவ இடத்திற்கு நாங்கள் வந்த போது அங்கு பொது மக்கள் இருந்தார்கள். அந்த பொது மக்களில் சாட்சிகள் யாரும் இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் வீடு சுமார் எவ்வளவு விஸ்தீரத்தில் இருக்கிறது என்றால் தெரியாது. அந்த வீட்டின் முன் கதவு வடக்கு நோக்கி இருந்தது. பிரேதம் எந்த நிலையில் இருந்தது என்றால் திசை குறிப்பிட்டு சொல்ல முடியாத நிலையில் இருந்தது. பிரேதம் குப்புற இருந்ததா மல்லாந்த நிலையில் இருந்ததா என்றால் நினைவில்லை. பிரேதம் அந்த வீட்டின் எந்த அறையில் இருந்தது என்றால் முன்பக்க அறையில் இருந்தது. நான் காவல் நிலையத்திற்கு சென்ற போதுஅங்கிருந்த காவலர்களின் பெயர் என்ன என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்த போது நேரம் என்ன இருக்கும் என்றால் நேரம் சரியாக தெரியவில்லை. எதிரியை கைது செய்த சமயத்தில் நானும் இருந்தேன். அதாவது போலிசாருடன் நானும் எதிரியை கைது செய்த இடத்திற்கு போயிருந்தேன். எதிரியை கைது செய்த போது பகல் 1-30 மணியிருக்கும். மேற்கூறிய தடயப் பொருட்களை எங்கு வைத்து பெறப்பட்டது என்றால் சம்பவம் நடந்த வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் மாமரத்திற்கு அடியில் வைத்து பெறப்பட்டது. தடயப்பொருட்களை கைப்பற்றுகை செய்த போது மாலை 4 மணியிருக்கும். எதிரியை கைது செய்த இடத்திலிருந்து தடயப்பொருட்கள் கைப்பற்றப்பட்ட இடம் சுமார் 10 கி மீக்குள் இருக்கும். 10 கி மீ துாரத்தை வாகனத்தில் சென்றடைய எவ்வளவு நேரம் ஆகும் என்றால் அரை மணி முதல் முக்கால் மணி நேரம் ஆகும். சம்பவ இடத்திற்கு அருகில் அக்கம் பக்கத்தில் வீடுகள் இருக்கிறதா என்றால் ஒரு பக்கத்தில் இருக்கிறது. சம்பவ வீட்டில் சத்தம் போட்டால் அக்கம் பக்கத்தில் உள்ள வீட்டுக்காரர்களுக்கு கேட்குமா என்றால் கேட்கும். சம்பவ வீட்டில் சத்தம் கேட்டு சம்பவம் நடந்திருந்தால் அக்கம்பக்கத்தில் இருந்தவர்களுக்கு கேட்டு வந்து பார்த்திருக்க வாய்ப்புண்டா என்றால் இரவு நேரத்தில் சம்பவம் நடந்திருப்பதால் அவ்வாறு கேட்டிருக்க வாய்ப்பு இல்லை. சம்பவவீட்டிற்கு பக்கத்து வீட்டுக்காரர்கள் உங்களுக்கு தகவல் கொடுத்தார்களா என்றால் இல்லை. என்னால் சொல்லப்பட்டுள்ளவாறு எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும் தேவையில்லாமல் கொடுத்த உண்மைக்கு புறம்கான தகவலின் பேரில் என்னால் புகார் கொடுக்கப்பட்டிருப்பதாக சொல்வது சரியல்ல.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Gokulavasan

Sd/- Tr.P.Elango.

III ADJ Salem.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.193/2018
Deposition of Witness for Prosecution PW-2
Name :திரு. விஜயன்
Father's Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 16th day of September- 2021.

முதல் விசாரணை:-

நான் தற்போது மன்னாயக்கன்பட்டியில் குடியிருக்கிறேன். இறந்த முருகேசன் வீட்டிற்கு 300 அடி துாரத்தில் என் வீடு இருக்கிறது. எதிரி மேற்படி முருகேசனின் மனைவியாவார். 25-6-2017 அன்று காலையில் நான் துாங்கிக்கொண்டிருந்தபோது என் மனைவி என்னை தட்டி எழுப்பி முருகேசன் வீட்டில் கொலை நடந்திருப்பதாக பேசிக் கொள்கிறார்கள் விசாரிக்க வி ஏ ஓ வந்திருப்பதாகவும் என்னை அழைப்பதாகவும் கூறினார். நான் அது குறித்து எதுவும் தெரியாது என்று சொன்னேன். வி ஏ ஓ புகார் நீங்கள் கொடுக்கிறீர்களா என்று கேட்டதற்கு நான் சம்பவத்தை பார்க்கவில்லை அதனால் புகார் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டேன். எதிரிக்கும் அவரது கணவருக்கும் சில நேரங்களில் சண்டை நடக்கும். முருகேசன் இறந்து விட்டதாக கேள்விப்பட்டேன். முருகேசன் மாம்பழ வியாபாரம் செய்து வந்ததுதெரியும். குடும்ப நிர்வாகத்தை எதிரியும் அவரது கணவரும் சேர்ந்து செய்தார்கள். வி ஏ ஓ என்னிடம் முருகேசன் கொலை செய்யப்பட்டு விட்டதாகவும்அது குறித்து புகார் கொடுக்கிறீர்களா என்று என்னிடம் கேட்டார். நான் முடியாது என்று சொல்லி விட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை( எதிரி தரப்பில்)

சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னிடம் என்னை விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் கையெழுத்து வாங்கவில்லை. என்னிடம்

கையெழுத்து போடச்சொல்லி போலிசார் கேட்கவில்லை. என்ன வாக்குமூலம் எழுதினார்கள் என்பது எனக்கு தெரியாது.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Vijayan

Sd/- Tr.P.Elango.

III ADJ Salem.